**செய்தி வெளியீடு எண்: 286** **நாள் : 12.06.2014**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஜீன் 2014 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 14.06.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி, அம்மாயம்மாள் தெரு, புளியந்தோப்பு, சென்னை 12 (T.B. உறாஸ்பிட்டல் அருகில்) |
| 2 | இராயபுரம் | தனலட்சுமி நடுநிலைப்பள்ளி, வேலாயுத பாண்டியன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. (கலந்தர் மதினா எதிரில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை துவக்கப்பள்ளி, 2, இரண்டாவது மெயின் ரோடு, சர்மா நகர், வியாசர்பாடி, சென்னை–39. (சர்மா நகர் பஸ் நிலையம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 35, என் பிளாக், பகத்சிங் 2வது தெரு, எம்.எம்.டி.ஏ.காலணி, அரும்பாக்கம், சென்னை 106 ( எம்.எம்.டி.ஏ.மார்க்கெட் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | இன்பாண்ட் ஜீசஸ் மெட்ரிகுலேசன் ஸ்கூல், 253, ரெட்உறில்ஸ் மெயின்ரோடு, அம்பத்துார், சென்னை–53.(ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | அரசினர் உயர்நிலைப் பள்ளி, 2வது மெயின் ரோடு, ஜெகன்னாத நகர் தெற்கு, வில்லிவாக்கம், சென்னை –49 ( வில்லிவாக்கம் சுரங்கப்பாதை அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, தேவராஜன் தெரு, சின்னசேக்காடு(மணலி மார்க்கெட் அருகில்) சென்னை–68. |
| 8 | ஆவடி | அரசினர் மேல்நிலைப்பள்ளி, 1 ஹைஉற ஸ்கூல் ரோடு, மிட்னமல்லி,சென்னை –55. |
| 9 | தி.நகர் | புண்ணியகோட்டி கல்யாண மண்டபம், 1, சக்கரபாணி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33 (ஐந்துவிளக்கு ரங்கராஜபுரம் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 10, சிருங்கேரி மடம்சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை–28 (மந்தைவெளி ரயில் நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | இந்து சமுதாயக்கூடம், 2, 8வது தெரு, இந்துகாலனி, நங்கல்லுார், சென்னை–61. (செல்லம்மாள் வித்யாலயா சீனியர் செகண்டரி ஸ்கூல் எதிரில்) |
| 12 | தாம்பரம் | சமுதாய நலக் கூடம், 2வது பிரதான சாலை, சிட்லபாக்கம், சென்னை–64. (சிட்லபாக்கம் காவல் நிலையம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை துவக்கப் பள்ளி, கோவிந்தசாமி தெரு, எம்ஜிஆர் நகர், சென்னை –78 |
| 14 | ஆயிரம்விளக்கு | பாலமந்திர் காமராஜ் அறக்கட்டளை மேல்நிலைப்பள்ளி (ம)நடுநிலைப்பள்ளி, 1, கிரியப்பா ரோடு, தியாகராய நகர், சென்னை–17. (பாரதிராஜா மருத்துவமனை அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையம் (ஐடிஐ) லாயிட்ஸ் காலனி, சென்னை – 14 (அரசு ஊழியர் குடியப்பு வளாகம்) |
| 16 | சோழிங்கநல்லூர் | சமுதாயநலக் கூடம், சித்தாலப்பாக்கம் மெயின்ரோடு, சித்தாலப்பாக்கம், சென்னை – 126. (சித்தாலப்பாக்கம் 1 (KG014) நியாயவிலை அங்காடி அருகில்) |

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**